தமிழகச் சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1967 மார்ச் 17.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை பத்து மணி அளவில் மதிப்பிற்குரிய தாற்காலிக சபாநாயகர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அந்த உரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் *

மதிப்பிற்குரிய தாற்காலிக பேரவைத் தலைவர் திரு. பி. கே. மூக்கையா தேவர்: இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபடி முதல் அலுவல் ஏற்கனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள், உறுதிமொழி எடுத்துக்கொள்வது ஆகும்.

சட்டசபை விதிகளின்படி சபாநாயகர், துணைச் சபாநாயகர் பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டவர்களும், அவர்களின் பெயரை நியமனம் செய்பவர்களும் அதை ஆதரிப்பவர்களும் உறுதிமொழி எடுத்திருக்க வேண்டும். எனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்களை இப்பொழுது உறுதிமொழி எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[பிறகு துணைச் செயலாளர் உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக்கொள்ளுமாறு அழைத்தார்கள்.]

திரு. வி. சின்னசாமி அவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

2. பேரவைத் தலைவர் தேர்தல்

மதிப்பிற்குரிய தாற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. பி. கே. மூக்கையா தேவர்) : சபையின் அடுத்த அலுவல் அரசியல் அமைப்பின் 178-வது பிரிவின்கீழ் சபாநாயகர் தேர்தல் ஆகும். அப்பதவிக்கு வேட்பாளர்களின் நியமனச் சீட்டுகள் சட்டசபை செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டசபை விதிகளின் 4 (4) விதியின்படி, சபாநாயகர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர்கள், நியமனம் செய்தவர்கள், அதை ஆதரித்தவர்கள் ஆகியவர்களின் பெயர்களை நான் முதன் முதலில் இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம் :—

மு.தலாவதாக, நியமனம் செய்யப்பெற்றவர் திரு. சி. பா. ஆதித்தனார்., அவரை நியமனம் செய்தவர் திரு. இரா. நெடுஞ்செழியன்; ஆதரித்தவர் திரு. மு. கருணாநிதி.

---

* 16-ம் பக்கத்திலுள்ள இணைப்பைக் காண்க